# இரண்டாம் தவணை மாதிரிப்பரீட்சை 2020

## வரலாறு

**தரம் - 6 சுட்டெண்.................. நேரம் - 2 மணித்தியாலம்**

**பகுதி I**

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

(1) இலங்கையின் வரலாற்றை அறிய உதவுகின்ற மகாவம்ச நூலை எழுதியவர்

1) மஹிந்த தேரர் (2) ஸ்ரீ சுமங்கல தேரர்

3) மகாநாம தேரர் (4) அரிட்ட தேரர்

(2) ''ஹிஜ்ரி'' ஆண்டுடன் தொடர்புபடும் நிகழ்வு

1) முகமதுநபி அவர்கள் பிறந்ததினம்.

2) முகமதுநபி அவர்கள் மக்காவை விட்டு மதீனாவுக்குச் சென்றமை.

3) முகமதுநபி அவர்களுக்கு இறைதரிசனம் கிடைத்தமை.

4) முகமதுநபி அவர்களால் இஸ்லாம் சமயம் தோற்றுவிக்கப்பட்டமை.

(3) மின்னேரியாக்குளத்தைக் கட்டுவித்த மன்னன் யார்?

1) தாதுசேன மன்னன் 2) பண்டுகாபய மன்னன்

3) மகாசேன மன்னன் 4) துட்டகைமுனு மன்னன்

(4) ''நெபியுலா'' என்னும் தூசிப்படலத்திலிருந்து தோன்றியதாகக் கருதப்படும் கோள்

1) சனி 2) செவ்வாய் 3) யுரேனஸ் 4) பூமி

(5) முதன் முதலில் நெருப்பை உபயோகித்த மனித இனம்

1) ஹோமோ இரெக்டஸ் 2) ஹோமோ சேபியன்

3) ஹோமோ ஹெபிலஸ் 4) ஒஸ்ரோபித்திகஸ்

(6) முதன் முதலாகத் தரையில் தாவரங்கள் தோன்றிய யுகம்

1) சிலூரியன் யுகம் 2) பெலியொசொயி யுகம்

3) பெரும்பனி யுகம் 4) இயோசின் யுகம்

(7) கீழ்வருவனவற்றுள் மாயா நாகரிகத்தின் கண்டுபிடிப்புக்களில் ஒன்று

1) வெடிமருந்து 2) இறப்பர்ப்பந்து 3) சில்லு 4) உலோகம்

(8) யூபிரடீஸ்- தைகிரீஸ் நதிப்பள்ளத்தாக்கில் தோன்றி வளர்ந்த நாகரிகம்

1) குவாங்கோ நாகரிகம் 2) கிரேக்க நாகரிகம்

3) மொசப்பத்தேமிய நாகரிகம் 4) உரோம நாகரிகம்

(9) உலகின் மிகப் பழைய சட்ட நூலை உருவாக்கியவர்கள்

1) எகிப்திய ஆட்சியாளர்கள் 2) சீன ஆட்சியாளர்கள்

3) கிரேக்க ஆட்சியாளர்கள் 4) ஹமுராபி ஆட்சியாளர்கள்

(10) இறந்த உடலை நீண்ட காலம் பேணி வைத்திருக்கக் கூடிய "மம்மி" முறையை உலகிற்கு வழங்கிய நாகரிகம்

1) எகிப்திய நாகரிகம் 2) குவாங்கோ நாகரிகம்

3) இன்கா நாகரிகம் 4) சிந்துவெளி நாகரிகம்

(11) மொசப்பத்தெமிய நகரங்களில் கடவுளை வழிபடுவதற்காக அமைக்கப்பட்ட ஆலயங்கள்

1) தேவாலயம் 2) சிகுறாத் 3) டயட் 4) கொலோசியம்

(12) முதன் முதல் அச்சியந்திரத்தைக் கண்டறிந்த நாட்டவர்

1) அரேபியர் 2) சீனர் 3) இந்தியர் 4) ஜப்பானியர்

(13) இலங்கையில் கற்கால யுகத்திற்குரிய ஆபரணமான சிப்பியைத் துளைத்துச் செய்யப்பட்ட அட்டியல் கண்டெடுக்கப்பட்ட குகை

1) பாகியன்கல 2) கித்துல்கல் 3) சீகிரியபொத்தான 4) பத்திராஜவெல

(14) விஜயனும் அவனது தோழர்களும் இலங்கையில் வந்திறங்கிய இடம்

1) கோகண்ண 2) மகாதித்த 3) தம்பபண்ணி 4) மகாகம

(15) " விஜயன் உள்ளிட்ட குழுவினர் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள்" எனக் குறிப்பிடும் நூல்

1) சூளவம்சம் 2) தீபவம்சம் 3) தூபவம்சம் 4) மகாவம்சம்

(16) இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர்கள் வசித்து வந்த இரு நகரங்கள்

1) கோகண்ண, களனி 2) லங்காபுர, சிறிசத்துவபுர

3) அநுராதபுர, பொலன்னறுவை 4) கண்டி, மாகமை

(17) விஜயன் குழுவினரால் அமைக்கப்பட்ட குடியேற்றங்களில் ஒன்று

1) கல்யாணி 2) மகாகம 3) அநுராதகம 4) மகாநாககுல

(18) முதன் முதலாக நகரின் அருகில் குளம் ஒன்றை கட்டுவித்த மன்னன்

1) வசப மன்னன் 2) துட்டகைமுனு மன்னன்

3) பண்டுகாபய மன்னன் 4) தாதுசேன மன்னன்

(19) இலங்கையில் பௌத்த சமயத்தைப் பின்பற்றிய முதலாவது மன்னன்

1) காசியப்ப மன்னன் 2) தேவநம்பியதீச மன்னன்

3) வலகம்பா மன்னன் 4) பண்டுகாபய மன்னன்

(20) பண்டுகாபய மன்னனின் பெற்றோர்கள்

1) காவந்தீசன், விகாரமாதேவி   2) தீககாமினி, உன்மாதசித்திரா

3) நிஸங்கமல்லன், கல்யாணி   4) ஜயமஹலே, சுனேத்ராதேவி

(2x20=40புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(01) (அ) 1) வரலாறு பாடத்தில் இரண்டாம் தவணையில் உமக்கு வழங்கப்பட்ட கணிப்பீட்டு வகையைப் பெயரிடுக? (01 புள்ளி )

2) அக் கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்த பாட அலகினைக் குறிப்பிடுக. (01 புள்ளி )

3) அக் கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்ததால் நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)

4) மேற்படி கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் நான்கினைக் குறிப்பிடுக? (02 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் அம்சங்கள் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களைத் தரப்பட்ட உலகப்புறவுருவப் படத்திலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக?

| | | | |
|---|---|---|---|
| 1) எகிப்து | (…..) | 4) இந்தியா | (…..) |
| 2) சீனா | (…..) | 5) அவுஸ்திரேலியா | (…..) |
| 3) ஈராக் | (…..) | 6) வடஅமெரிக்கா | (…..) |




(06 புள்ளிகள்)

(02) 1) a) பொலன்னறுவைக் கல்விகாரையைக் கட்டுவித்த மன்னன் யார்?

b) இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்கு உதவும் இலக்கிய மூலாதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

2) வரலாற்றைக் கற்பதன் பயன்கள் மூன்று தருக?

3) வரலாற்றுக் காலத்தை அளவிடப் பயன்படுத்தப்படும் முறைகள் மூன்றினை எழுதுக?

4) பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறை பற்றி மூன்று விடயங்களைக் குறிப்பிடுக?

(12 புள்ளிகள்)

(03) 1) a) வானர பரம்பரையைச் சேர்ந்த சிம்பன்சியிலிருந்து மனிதன் முன்னேறிய செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்?

b) மனிதன் முதன் முதல் நெருப்பைப் பயன்படுத்தியமைக்கான சான்று கண்டுபிடிக்கப்பட்ட நாடு எது?

c) ''ஹோமோஹெபிலஸ்'' என்பதன் பொருள் யாது?

2) இடைக்கற்காலத்தில் மனிதன் அடைந்த முன்னேற்றங்கள் மூன்று தருக?

3) மொங்கலொயிட் மனிதவர்க்கத்தினர் வாழ்கின்ற நாடுகள் மூன்று எழுதுக?

4) புதிய கற்காலத்தில் ஏற்பட்ட மூன்று மாற்றங்களைக் குறிப்பிடுக?

(12 புள்ளிகள்)

(04) 1) கீழே தரப்பட்டுள்ளவற்றுடன் தொடர்புபடுகின்ற நதிக்கரை நாகரிகங்களைக் குறிப்பிடுக?

a) ஆப்பு வடிவிலான எழுத்து

b) மிருக அடையாளத்துடனான களிமண் இலச்சினை

c) பிரமிட்

2) மொசப்பத்தேமிய மக்கட் சமூகத்தில் காணப்பட்ட பிரிவுகளில் மூன்றை எழுதுக?

3) மொசப்பத்தேமிய நாகரிக மக்கள் மேற்கொண்ட விவசாய நடவடிக்கைகள் தொடர்பான மூன்று விடயங்களைத் தருக?

4) மொசப்பத்தேமியர்கள் வழிபட்ட தெய்வங்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. இத்தெய்வங்கள் எவற்றின் அதிபதிகளாக வழிபடப்பட்டனர் எனக் குறிப்பிடுக?

a) என்லிலி

b) அனு

c) என்கிகி

(12 புள்ளிகள்)

(05) 1) பின்வரும் பிரதேசங்களில் முதன் முதல் பயிரிடப்பட்ட பயிர்களைப் பெயரிடுக?

a) சீனா

b) மத்திய மெக்சிக்கோ

c) மத்தியதரைக் கடற்பிரதேசம்

2) சிந்துவெளிநாகரிகத்தில் வளர்ச்சி பெற்றிருந்த நகரங்களில் மூன்றைக் குறிப்பிடுக?

3) சிந்துவெளிநாகரிக நகரங்களின் பண்புகள் மூன்று தருக?



4) a) படத்தில் காணப்படும் அரசியின் பெயர் என்ன?

b) இவ் அரசி ஆட்சி செய்த நாடு எது?

c) அந்த நாட்டின் தலைநகரைக் குறிப்பிடுக?

(12புள்ளிகள்)

(06)1) கீழே தரப்பட்டுள்ள ஆரியர் குடியேற்றங்களை உருவாக்கிய அமைச்சர்களைக் குறிப்பிடுக?

a) உபதிஸ்ஸ கம

b) உருவெல கம

c) தீகாயு கம

2) புராதன காலத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் மூன்று தருக?

3) இலங்கை புராதன காலம் தொட்டு சர்வதேச ரீதியில் புகழ்பெற்று விளங்குவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

4) அநுராதகமவை நகரமாக நிர்மாணிப்பதன் பொருட்டு பண்டுகாபய மன்னன் முன்னெடுத்த திட்டமிடல் நடவடிக்கைகள் மூன்று எழுதுக?

(12புள்ளிகள்)

## விடைகள்

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 6) 2 | 11) 2 | 16) 2 |
| 2) 2 | 7) 2 | 12) 2 | 17) 3 |
| 3) 3 | 8) 3 | 13) 1 | 18) 3 |
| 4) 4 | 9) 4 | 14) 3 | 19) 2 |
| 5) 1 | 10)1 | 15) 4 | 20) 2 |

## பகுதி II

(01) (அ) பொருத்தமான விடைகள்

(ஆ) 1- D
2- B
3- F
4- C
5- A
6- E

(02) 1) a) மகாபராக்கிரமபாகு b) தீபவம்சம், மகாவம்சம்

2) ✱ எமது நாட்டினை எவ்வாறு விருத்தி செய்யலாம் என்பதைத் தீர்மானித்தல்
✱ தற்காலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண்பதற்கு
✱ நிகழ்காலத்தைப் பயனுள்ளதாக்குவதற்கு
✱ எதிர்காலச் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு

3) ✱ கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின்
✱ புத்தவருடம்
✱ சாலிவாகன சகாப்தம்
✱ ஹிஜ்ரி வருடம்

4) ✱ கூட்டமாகக் குடிசைகள் அமைத்து வாழ்ந்தனர்.

✱ இறந்த உறவினரின் மரணச்சடங்குகளை நடாத்துவதற்குப் பழகினர்.

✱ பண்டமாற்று முறை பின்பற்றப்பட்டது.

✱ வேட்டையாடி உணவைப் பெற்றுக் கொண்டனர்.

✱ சித்திரம் வரையவும், கற்களைக் கொண்டு உருவங்கள் அமைக்கவும் பழகினர்.

(03) 1) a) மானிடபரிணாமம்
b) இஸ்ரேல்
c) ஆற்றலுடைய மனிதன்

2) ✱ வேட்டையாடுதல் பிரதான தொழில்
✱ வேட்டையாடுவதற்கு வில் , அம்பு பயன்படுத்தப்பட்டன.
✱ ஒரே இடத்தில் நீண்டகாலம் வாழப்பழகியமை.

✱ மரம்,தடி, இலைகளால் வீடுகள் அமைக்கப்பட்டன.
✱ பல வித நிறங்களைப் பயன்படுத்திச் சித்திரங்கள் வரையப்பட்டன.

3) சீனா, யப்பான், கொரியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து.

4) ✱விவசாயம் செய்யப் பழகிக்கொண்டமை.

✱கோதுமை, பார்லி, நெல், குரக்கன் என்பன பயிரிடுதல் ஆரம்பமானது.

✱மிருக வளர்ப்பு இடம்பெற்றது.

✱முதன் முதலாக உலோகம் கண்டுபிடிக்கப்பட்டது.

✱கல்லாயுதங்களுக்குப் பதிலாக உலோக ஆயுதங்கள் செய்யப்பட்டன.

✱கிராமங்கள் தோற்றம் பெற்றன.

✱கடவுளை வழிபடுதல் ஆரம்பமானது.

✱செல்வந்தர், ஏழை என்ற பாகுபாடு தோன்றியது.

(04) 1) a) மொசப்பத்தேமிய நாகரிகம்
b) சிந்துநதிக்கரை நாகரிகம்
c) எகிப்திய நாகரிகம்

2) ✱குருமார்

✱உயர்குடிமக்கள்

✱கீழ்மட்டமக்கள்

✱அடிமைகள்

3)✱விவசாயமும், மிருகவளர்ப்பும் இடம்பெற்றது.

✱ஆற்றுநீர் கால்வாய்கள் மூலம் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டது.

✱நிலத்தைத் தயார் செய்வதற்கு மிருகங்கள் பயன்படுத்தப்பட்டன.

✱உலோகத்தினாலான கலப்பை, கல்லால் செய்யப்பட்ட மண்வெட்டிகள் பயன்படுத்தப்பட்டன.

✱தானியங்கள், பழங்கள், காய்கறிகள் விளைவிக்கப்பட்டன.

✱பிரதான தானியங்களாக கோதுமை, பார்லி என்பன விளங்கின.

4) a) காற்றுக்கும், விவசாயத்திற்கும் அதிபதி

b) கடவுள்குழுவின் தலைவன்

c) பூமிக்கு அதிபதி.

(05) 1) a) – நெல் b) – சோளம் c) – கோதுமை

2) ✱ஹரப்பா

✱மொஹஞ்சதாரோ

✱டொலவீர

✱கலிபன்கள்

3) ✱மக்கள் தொகை ஐம்பது இலட்சமாகக் காணப்பட்டது.

✱செம்பு, வெண்கலம், ஈயம், வெள்ளீயம் போன்ற உலோகப்பயன்பாடு மக்கள் மத்தியில் காணப்பட்டது.

✱சுட்ட செங்கற்களைக் கொண்டு வீடுகள் கட்டப்பட்டிருந்தன.

✱வீடுகளில் உயர்நிலையிலான நீர்க்குழாய்த்தொகுதிகள் இருந்தன.

✱ஒழுங்குமுறையில் அமைக்கப்பட்ட கிணறு, அழுக்குகளை வெளியேற்றும் குழாய்த்தொகுதிகள் அமைக்கப்பட்டிருந்தன.

✱நன்கு அமைக்கப்பட்டிருந்த வீதிகள்.

✱திட்டமிட்ட நகர வடிவமைப்பு

4) a)- நெபநெபவுட்டேன் அரசி/ நெபநெபவுட்டேன் நெபட்டிட்டி அரசி

b)- எகிப்து

c)- கெய்ரோ

(06) 1) a)- உபதிஸ்ஸ b)-உருவெல c)-தீகாயு

2) சிங்களத்தீவு, செய்லான், சிஹலதீப, செரண்டிப், தப்ரபேன்

3) ✱பெறுமதி மிக்க பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்

✱எழில் மிக்க தீவாக இருத்தல்

4) ✱நகரப்பிரதேசத்தைச் சுற்றி பாதுகாப்பு அகழிகள் வெட்டப்பட்டன.

✱நகரின் நான்கு திசைகளிலும் வாயில்கள் அமைக்கப்பட்டன.

✱அவ்வாயில்களினூடாக , நகரின் ஏனைய பகுதிகளை இணைக்கும் வகையில் வீதிகள்

அமைக்கப்பட்டன.

✱நகரை அழகுபடுத்த பூங்காக்கள், தடாகங்கள் அமைக்கப்பட்டன.

✱நகரக்கழிவுகளை அகற்றவும், நகரைச் சுத்தம் செய்வதற்கும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

*********

# வரலாறு

## தரம் 6 அலகு 2 ஆதிமனிதன்

- **2.0**
    - மனிதன்
    - விலங்குகள்
    - தாவரங்கள்

    ஆகிய அனைத்து உயிரினங்களின் வாழிடம் - பூமி

- அவற்றிற்கான
    - உணவு
    - ஏனைய தேவைகள்

    பூமியால் வழங்கப்படுகின்றது. இவற்றிற்கிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

### 2.1 மனிதன் தோன்றிய சூழல்

- நாம் வாழும் பூமி
    - ஒரு கோள்
    - 4540 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது.
- பூமி தோன்றியது தொடர்பான கொள்கைகள்
    - விண்ணிலிருந்த தூசிப் படலத்திலிருந்து தோன்றியது – பொதுவான நம்பிக்கை
    - இத் தூசிப்படலம் **'நிகாரிகா'** என அழைக்கப்பட்டது.
    - இதன் ஆங்கிலப் பதம் ' **நெபியுலா**' (Nebula)
    - புவி தோற்றம் பெற்ற போது
        - வெப்பமாக இருந்தது.
        - படிப்படியாகக் குளிர்ச்சியடைந்தது.
        - புவியின் மையப்பகுதி (நடு) தற்பொழுதும் அதிக வெப்பத்தைக் கொண்டுள்ளது. அதன் வெப்பம் **6000˙C**
        - எரிமலை வெடிக்கும் போது அதிலிருந்து வெளிவரும் பாறைக் குழம்பு – **லாவா**
- பூமி உருவாகி சிறிது காலத்தின் பின்பே புவியில் உயிரினங்கள் தோற்றம் பெற்றன.
- அவ் உயிரினம் கண்ணிற்குத் தெரியாததாக இருந்தது.
- அது **'புரோகாயோட் பக்டீரியா'** எனப்பட்டது.
- இப்பற்றீரியா இற்றைக்கு 2500 மில்லியன் வருடங்களுக்கு முன் தோற்றம் பெற்றதாகக் கருதப்படுகின்றது.
- 542 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உயிரினமொன்றின் சுவடு **கனடாவில்** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இவ் உயிரினம்
    - **4 – 7 CM** க்கு இடைப்பட்ட நீளமுடையது
    - கடலடியில் வாழ்ந்துள்ளது.
    - வாய்
    - ஐந்து கண்கள் என்பன இதற்கு இருந்துள்ளது.

- அது ‘**ஒபபீனியா**’ என அழைக்கப்பட்டது.

➢ உலகில் முதன் முதலில் நீரிலேயே உயிரினங்கள் தோன்றின.

➢ அதன் பின்பே தரையில் உயிரினங்கள் தோற்றம் பெற்றன.

❖ முதன் முதலில் தரையில் தோன்றிய உயிரினங்கள்

- பாதங்கள் பலவற்றைக் கொண்ட **மர அட்டைகள்** போன்ற உயிரினங்கள் ஆகும்.
- 420 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றுள்ளது.
- இந்த உயிரினங்கள் தோன்றிய யுகம் - **சிலூரியன் யுகம்.**
- 540 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு **பொலியோசோயிக்** யுகத்திலேயே தரையில் தாவரங்கள் முதன்முதலாகத் தோற்றம் பெற்றன.
- மனிதன் புவியில் தோற்றம் பெற்றது மிகவும் பிற்பட்ட காலத்திலேயாகும்.

## 2.2 ஆதி மனிதனின் பரம்பல்

மனிதனின் தோற்றம்

- மனிதன் இயற்கையுடன் இணைந்த விலங்கு
- ஏனைய விலங்குகளைவிட முன்னேறியவன்
- மனிதனால்
  - நிர்மாணிக்கும் ஆற்றல் (தொழில்நுட்பம்)
  - கருத்துப் பரிமாற்றம் செய்யும் ஆற்றல் (மொழி)
  - ஆடல், பாடல் (கலை)

  போன்ற விடயங்கள் வெளிப்படுத்தப் படுகின்றன.
- இத் தன்மைகளை ஏனைய விலங்குகளிடம் காண முடியாது.
- புவி தவிர ஏனைய கோள்களைக் கூட மனிதன் இன்று ஆய்வு செய்துள்ளான்

**சிம்பன்சி – மனிதன்**

- மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான்.
- 25 இலட்சம் வருடங்களுக்கு முன் இப் புவி மிகவும் குளிர்ச்சியாக இருந்துள்ளது.
- இக் காலம் “ **பெரும் பனியுகம்**” எனப்பட்டது.
- இப் பனியுகம் ஆரம்பமான காலத்தில் ஆபிரிக்காவில் வாழ்ந்த சிம்பன்சிகளில் ஒரு பிரிவினர் ஏனையவர்களை விட வித்தியாசமானவர்களாக வளரத் தொடங்கினர்.

அக்காலத்தில்

- கடுங்குளிர்
- உணவுப் பற்றாக்குறை இருந்தது.

இதனால்

- பழக்கமில்லாத உணவினை உட்கொள்ள வேண்டி இருந்தது.
- சிம்பன்சிகளின்
  - பற்களிலும்
  - முகத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டன.
- இரண்டு கால்களால் நடக்கப்பழகினான்
- இதனடிப்படையில் சிம்பன்சியிலிருந்து மனிதன் தோற்றம் பெற்றான்.
- வானரக் கரங்கிலிருந்து மனித பரம்பரை தோற்றம் பெறுவதற்கான முக்கிய காரணம் **பெரும்பனியுகத்தில்** நிலவிய காலநிலையாகும்.
- இக்காலத்தில் புவியின்

- வடக்கு
- தெற்குப் பகுதி தடித்த பனிப்படலத்தால் மூடப்பட்டிருந்தது.

- தாவரங்கள் வளரவில்லை.
- இதனால் போதியளவு உணவு பெற்றுக் கொள்ள முடியவில்லை.
- “ மெமத் யானைகள்” இக்காலத்தில் தோற்றம் பெற்றன.
- பெரும்பனியுகம் எனப்படும் மிகக் குளிரான காலத்தில் வெப்பம் குறுகிய காலமே நிலவியது.
- குளிரான காலங்கள் - நான்கு
- வெப்பம் நிலவிய காலங்கள் - நான்கு
- வெப்பக் காலநிலை நிலவிய காலத்தில்
  - உணவு தாராளமாகக் கிடைத்தது.
  - உயிரினங்கள் மகிழ்வாக வாழ்ந்தன.
  - வானரபரம்பரையைச் சேர்ந்த சிம்பன்சியிலிருந்து மனிதன் முன்னேறினான்.
  - இது **“மானிட பரிணாமம்”** எனப்படுகின்றது.

### ஒஸ்ரலோபிதிகஸ்

- ஆரம்ப காலத்தில்
- வானரத்திற்கும்
- மனிதனிற்கும் இடையில் உருவ அமைப்பில் பாரிய வேறுபாடுகள் காணப்படவில்லை. ஆனால் மனிதன்
- உபகரணங்களைப் பயன்படுத்தினான்.
- இயற்கையாக நீர் பாய்ந்து செல்லும் ஓடைகளிலுள்ள வட்டமான கற்களைச் சேகரித்து அவற்றினால் விதைகளை இடித்து உணவாகப் பயன்படுத்தினான்
- அக்கற்களை மனிதன் வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தினான்.
- மனித நிலையை அடைந்த வானரம் “ ஒஸ்ரலோபிதிகஸ்” எனப்பட்டது.
- இதன் பண்பு
  - இருகால்களாலும் நடந்து செல்லும்
  - 3.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இது இரு கால்களாலும் நடந்து சென்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
  - இத் திறமையினால் வானரங்களால் செய்ய முடியாததை மனிதன் செய்தான்.

### ஹோமோஹெபிலஸ்

- கல்லொன்றினால் மற்றொரு கல்லை அடித்தது.
- கல்லொன்றின் ஒரு பகுதியை அகற்றி கூர்மையான ஆயுதங்களைச் செய்தது.
- இத்தகைய முயற்சியில் ஈடுபட்ட முதல் மனிதன் **ஹோமோஹெபிலஸ்** எனப்பட்டான்
- **ஹோமோஹெபிலஸ்** என்பதன் பொருள் - **ஆற்றலுடைய மனிதன்** என்பதாகும்.
- இம்மனிதன் 2.3 – 1.4 மில்லியன் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்துள்ளான்.

### ஹோமோ இரெக்டஸ்

- நெருப்பைக் கண்டுபிடித்தான்

- உணவை நெருப்பில் சுட்டுப் பயன்படுத்தினான்
- உணவு சமிபாடடையக் கூடியதாக இருந்தது.
- குளிர்காலத்தில் வெப்பமூட்டக் கூடியதாக இருந்தது.
- வாழ்க்கையை மேலும் வசதிகள் நிறைந்ததாக மாற்றியதுடன் உடல் அமைப்பு அழகு பெற உதவியது.
- மனிதன் நெருப்பை முதன்முதலாக கண்டுபிடித்தமைக்கான ஆதாரம் இஸ்ரேலில் கண்டறியப்பட்டுள்ளது.
- இது 7,90,000 ஆண்டுகள் பழமையானது.
- ''ஹோமோ இரெக்டஸ்'' என்ற மனித இனமே முதன்முதலாக நெருப்பைப் பயன்படுத்தியுள்ளான்.
- 1800 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இவன் வாழ்ந்துள்ளான்.

## ஹோமோ நியன்ட தாலன்கிஸ்

- மனிதனின் உடலமைப்பு மாற்றமடைந்தது.
- மனிதனின் மூளையும் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. இது முக்கிய நிகழ்வு
- வானரத்தின் மூளையை விடப்பெரிதாக வளர்ச்சியடைந்ததுடன்
- மண்டையோடும் அதற்கு இசைவாக்கம் பெற்றது.
- 600,000 வருடங்களுக்கு முன் ''ஹோமோ நியன்டதாலன்சிஸ்'' என்ற வானரம் மனித இனத்துடன் தொடர்புபட்டது.
- இவ் வானரம்
    - பெரிய மிருகங்களின் எலும்புகளைக் கொண்டு வீடுகளை அமைத்தது.
    - காய், கனிகளை உணவாகப் பயன்படுத்தியது.
    - வேட்டையாடியது.

## ஹோமோ சேர்பியன்

- மனிதனின் உடலமைப்பில் மாற்றம் ஏற்பட்டது.
- படிப்படியாக மூளை வளர்ச்சியடைந்தது.
- வானரத்தின் மூளையைவிடப் பெரிதாகியது.
- மனிதனின் மண்டையோடு இதற்கு இசைவாக்கம் அடைந்தது.
- 200,000 ஆண்டுகளாக மனிதன் தனது திறமையை வளர்த்துக் கொண்டான்.
- புதியவற்றைச் செய்வதற்கு முயற்சி செய்தபடியால் அவனது மூளை நன்கு விருத்தியடைந்தது.
- இற்றைக்கு 100,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தான்.
    - பிறருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளக் கூடிய மொழியையும்
    - உணர்வினை வெளிப்படுத்த
        - ஆடல்
        - பாடல்
        - ஓவியம் என்பவற்றையும் பயன்படுத்தக் கூடிய தன்னை ஏற்பட்டது.
- இன்றைய மனித இனத்தவர் ஹோமோசேர்ப்பியன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

### 2.3 கலாசார வளர்ச்சி

- சிம்பன்சியிலிருந்து மனிதனின் உடல் மூளை வளர்ச்சியடைந்த நீண்ட காலப்பகுதியில் தான் வாழும் முறையையும் மாற்றிக் கொண்டான். இது கலாசார மாற்றம் எனப்பட்டது.
- நீண்டகாலமாக மனிதன் அடைந்த வெற்றிக்குச் சான்றாக அமைவது மனிதனால் செய்யப்பட்ட கல்லாயுதங்களாகும்.
- பழுதடைய முடியாதபடியால் கல்லாயுதங்கள் நீண்டகாலமாக நிலைத்திருந்தன.

- நாளடைவில்
  - மனிதனால் செய்யப்பட்ட கல்லாயுதங்களின்
    - அமைப்பு
    - அளவு
    - வினைத்திறன் என்பன முன்னேற்றமடைந்தது.
- மனிதன் பயன்படுத்திய ஆயுதங்களின் அடிப்படையில் அவனது கலாசார வளர்ச்சி
  - பழைய கற்காலம்
  - இடைக் கற்காலம்
  - புதிய கற்காலம் எனப் பாகுபடுத்தப்பட்டது.

## பழைய கற்காலம்.

மனிதன்

- குழுவாக வாழ்ந்தான்
- இடத்திற்கு இடம் குடிசைகளை அமைத்து கூட்டமாக வாழ்ந்தான்
- ஒரு குழுவில் 20, 30 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் இருந்தன.
- இறந்த தமது உறவினர்களின் மரணச் சடங்குகளை நடத்தினான்

சடங்கு முறை

- இறந்தவர்களின் எலும்புகள் மீது வர்ணம் பூசுவதாகும்.
- வர்ணம் தயாரிப்பதற்கு நிறக்கற்கள் பயன்படுத்தப்பட்டன.
- அக்கற்கள் கிடைக்காத இடங்களில் வாழ்ந்தோர் அவை கிடைக்கும் பிரதேசங்களில் வாழ்ந்தோரிடமிருந்து இவற்றைப் பெற்றுக் கொண்டனர்
- இக்காலத்தில் பண்டமாற்று முறை ஆரம்பமானது.
- மக்கள் தொகை அதிகமாக இருக்கவில்லை.

### பழைய கற்காலம்

- மனிதன் இடத்திற்கு இடம் சென்று உணவினைச் சேகரித்தும் வேட்டையாடியும் வாழ்ந்தான்.
- இக்காலத்தின் பிற்பகுதியில் மனிதன்
  - சித்திரம் வரைவதற்கும்
  - கற்களைக் கொண்டு உருவங்களை அமைப்பதற்கும் பழகிக் கொண்டான்.

### இடைக்கற்காலம்

- **20,000 – 18,000** இற்கும் இடைப்பட்ட காலத்தில் இக்காலம் ஆரம்பமாகியது.
- மனிதன்
  - வேட்டையாடியும்
  - அலைந்து திரிந்து உணவைச் சேகரித்தும் வாழ்க்கை நடத்தினான்.
  - வில், அம்பு என்பவற்றைப் பயன்படுத்தி வேட்டையாடத் தொடங்கினான்.
  - காய், கனிகள், இலைகள், கிழங்கு வகைகள் போன்றவற்றை உணவாகக் கொண்டான்.
  - ஒரே இடத்தில் நீண்டகாலம் வாழ்வதற்கு மனிதன் பழகிக் கொண்டான்.
  - மரங்கள், தடிகள், இலைகுழைகள் போன்றவற்றால் வீடு அமைப்பதில் வெற்றி பெற்றான்.
  - பலவித நிறங்களைப் பயன்படுத்திக் கற்பாறைகளில் சித்திரங்கள் வரைந்தான்.

## புதியகற்காலம்

- 9000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமானது.
- விவசாயம் செய்யப்பழகிக் கொண்டான்.
- கோதுமை, பார்லி, நெல், குரக்கன் பயிரிடப்பட்டது.
- மிருக வளர்ப்பு வளர்ச்சியடைந்தது.
- உலோகம் கண்டறியப்பட்டது.
- கல்லாயுதங்களுக்குப் பதிலாக உலோக ஆயுதங்கள் செய்யப்பட்டது.
- ஒரே இடத்தில் நிரந்தரமாக வாழ முற்பட்டனர்.
- கிராமங்கள் தோற்றம் பெற்றது
- விவசாயம்
- மிருகங்களின் பாதுகாப்பிற்காக கடவுளை வழிபடுதல் ஆரம்பமானது.
- மனிதன் சமய வழிபாடுகளில் முதன் முதல் ஈடுபட்டது.
- புதிய கற்காலத்தில் நீண்ட காலம் விவசாயத்தில் ஈடுபட்டமையால் ஏராளமான உணவு கிடைத்தது.
- இது சிலரை செல்வந்தர் என்ற நிலைக்கு உயர்த்தியது.
- இதனால் இக்காலத்தில்
    - செல்வந்தர்
    - எழை என்ற பகுபாடு தோன்றியது.

- செல்வந்தர்களின் பலம் அதிகரித்தது. நகர வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டனர்

**3. விவசாயத்தின் ஆரம்பம்.**

**ஹொலோசின் யுகம்.**

- பெரும்பனியுகம் இற்றைக்கு 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் முடிவடைந்தது.
- குளிர்ந்த காலநிலை வெப்பமடையத் தொடங்கியது.
- தாவரங்கள் செழிப்பாக வளர்ந்தன.
- மிருகங்களுக்குத் தேவையான உணவு தாராளமாகக் கிடைத்தது.
- இது ஹொலோசியன் யுகம் எனப்பட்டது.
- விவசாயம் செய்யத் தொடங்கியது.
- உலோகங்களைக் கண்டறிந்து தேவைகளுக்குப் பயன்படுத்தினர்.
- மிருகங்களை வளர்த்தனர்.
- தானியங்களைப் பயிரிட்டனர்.
  உதாரணமாக நெற் செய்கை

சீனாவில் (கி.மு. 7000 – 9000 ஆண்டுகளுக்கு முன்)
கோதுமை – மத்திய தரைக்கடல் பிரதேசம் ( கி.மு 9000 – 11000 ஆண்டுகளுக்கு முன்)
சோளம் - மத்திய மெச்சிக்கோ (கி.மு. 3000 – 5000 ஆண்டுகளுக்கு முன்

- விவசாயத்தில் ஈடுபட்டதால் குடும்ப அங்கத்தவர்களுடன் ஒரே இடத்தில் வசித்தான்
- இருப்பிடங்களுக்காக வீடுகளை அமைத்தான்
- 6000 ஆண்டுகளுக்கு முன் முதன்முதல் தோற்றம் பெற்ற கிராமங்களின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- விவசாயத்தினால் பொருத்தமான தானிய வகைகளை அறிந்து கொள்ளவும் அவற்றைப் பயிரிடவும் மனிதன் முயற்சி செய்தான்.
- விவசாய உபகரணங்கள் செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- களிமண்ணால் செய்யப்பட்ட அரிவாள், இஸ்ரேலில் உள்ள கற்குகை ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

ஆரம்ப கால வீடுகள்

- மிகவும் எளிமையானவை

- களிமண்ணால் கட்டப்பட்ட சுவர்களையும்
- இலைகுழைகளால் வேயப்பட்டகூரைகளையும் அவை கொண்டிருந்தன.
- மண்குடிசைகள்
- சில நாடுகளில் இவ் வீடுகளின் சுவர்கள் தடிகளால் கட்டப்பட்டிருந்தன.

- விவசாயம் செய்யப் பழகியமையால் கிடைத்த ஓய்வு நேரத்தில்
    - சித்திரம் வரைதல்
    - சிலைகள் அமைத்தல்
    - பாடுதல்
    - ஆடுதல் போன்றவற்றில் ஈடுபட்டான். இதனால் நாகரிகம் கட்டியெழுப்பப்பட்டது.

- பறவைகள்
- மிருகங்கள்
- ஊர்வன
- சிறு உயிரினங்கள்
- புழுக்கள்

} தரையில் வளர்ச்சியடைந்தன.

வானரத்திலிருந்து ஹோமோசேபியன் எனப்படும் அறிவுள்ள மனிதனாக வளர்ச்சியடைந்தான்.

ஹோமோசேர்பியன் →
- கொக்கோ சொயிட்
- நீக்ரொயிட்
- ஒஸ்ரலொயிட்
- மொங்கொலொயிட்

என நான்கு இனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

# வரலாறு

## தரம் 6 அலகு 3

## உலகின் புராதன நாகரிகங்கள்.

### 3.1 கிராமிய சமுதாயம் நகர மயமாதலும் நாகரிகங்களின் தோற்றமும்

- கிராமத்தில் வாழ்ந்த மனிதன் படிப்படியாக வளர்ச்சியடைந்து நகர சமூகத்தை உருவாக்கினான்.
- விவசாயம், மந்தை வளர்ப்பு போன்ற பொருளாதார நடவடிக்கைகளால் கிராம வாசிகள் சிலர் செல்வந்தர்களாகினர்.
- செழிப்பற்ற, எளிதில் நீரைப் பெற்றுக் கொள்ள முடியாத பகுதிகளில் இருந்த விவசாயிகளுக்கு
    - நல்ல விளைச்சல் கிடைக்காததினால் அவர்களது வாழ்க்கை சிரமமானதாக அமைந்தது.
    - அதனால் கிராமத்தில் அவர்கள் ஏழைகளாகக் கருதப்பட்டனர்.
    - இதனால் சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற இரு பிரிவுகள் தோற்றம் பெற்றன.
- செல்வந்தர்களும் அவர்களது உறவினர்களும் கிராமத்தினை விட்டுப் பிரிந்து வாழ்ந்தனர்.
- அவர்களது வாழிடங்கள் மண்வீடுகளுக்குப் பதிலாக
    - கல்வீடுகள்
    - நன்கு அமைக்கப்பட்ட பாதைகள்
    - அகழிகள்
    - மதில்கள்
    - சமய வழிபாட்டுத் தலங்கள்

    போன்றவற்றைக் கொண்டிருந்தன.
- இவை உள்ளடக்கப்பட்ட பிரதேசங்கள் நகரங்கள் என அழைக்கப்பட்டன.
- இந்நகரங்களில் வாழ்ந்த செல்வந்தர்கள் நகரவாசிகள் என அழைக்கப்பட்டனர்.
- நகரத்தில் வாழ்ந்தவர்கள் விவசாயம், மந்தை வளர்ப்பு போன்றவற்றில் ஈடுபடவில்லை. அதற்குப் பதிலாக
    - தமக்குச் சொந்தமான இடங்களில் கிராமவாசிகளைக் கொண்டு விவசாயம் செய்தனர்
    - விளைச்சலில் பெரும்பகுதி நகரங்களில் வாழ்ந்தவர்களால் சொந்தமாக்கிக் கொள்ளப்பட்டன.
- நாகரிகம் என்பது இவ்வாறு உருவாகிய
    - நகரத்தையும்
    - அங்கு வாழ்ந்தோர்
    - அவர்கள் வாழ்ந்த முறை போன்றவற்றைக் கூறுவதாகும்.
    - கிராமங்களை விட நகரங்கள் பெரியவை.
- நகரங்களில் வாழ்ந்தோர்
    - எழுத கற்றுக் கொண்டனர்
    - நகரை நிர்வாகம் செய்தனர்
    - சமய வழிபாட்டுத் தலங்களை அமைத்துக் கொண்டனர்
    - தூர நாடுகளுடன் வர்த்தகம் செய்தனர்
- நாகரிகம் என்பது பல்வேறு திறன்களைக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் வாழ்ந்த பிரதேசங்கள் எனக் குறிப்பிடலாம்.

## உலகின் பல்வேறு பிரதேசங்களில் உருவாகிய புரதான நாகரிகங்கள்

- ❖ மொசப்பத்தேமியா – யூப்பிரட்டீஸ் தைக்கரீஸ்
- ❖ எகிப்து – நைல்நதி
- ❖ இந்தியா – சிந்து நதி
- ❖ சீனா – குவாங்கோ நதி

நாகரிகங்களைக் குறிப்பிடலாம்.

- ❖ மொசப்பத்தேமிய நாகரிக கணிதவியலாளர்கள்
- வட்டத்தில் 360˙ இருக்கின்றது எனவும்

- நிமிடம் ஒன்றில் 60 வினாடிகள் எனவும்
- மணித்தியாலத்தில் 60 நிமிடங்கள் எனவும் கணித்தனர்.

❖ சீனர்கள்
  - வெடிமருந்து
  - திசையறிகருவி
  - கடதாசி
  - அச்சியந்திரம் போன்றவற்றை உலகிற்கு முதன்முதல் அறிமுகம் செய்தனர்.

மாயா நாகரிகததவர்கள்

- இறப்பர் பந்தினைப் பயன் படுத்தியுள்ளார்.

இறப்பர்
- காலணிகள்
- விமானங்களின் சில்லுகள்

போன்றவற்றிற்கு இன்று பயன்படுகின்றது.

## 3.2 நாகரிகப் பரம்பலும் உலகிற்கு உரித்தான கொடையும்.

நாகரிகம் என்பது நகரமும், அதில் வாழும் சனத்தொகையும் கொண்ட சமூகம் ஆகும். மனிதனின் முன்னேற்றத்தை வெளிப்படுத்துபவையாக நகரங்கள் அமைந்துள்ளன.

### மொசப்பத்தேமிய நாகரிகம்

- இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.
- கி.மு. 3100 – 2900 இற்கு இடைப்பட்ட காலத்தில் நிலவியது.
- யூப்பிரட்டீஸ், தைக்கரீஸ் நதிப் பள்ளத்தாக்கில் வளர்ச்சியடைந்தது.
- தற்போது இது ஈராக் நாட்டில் காணப்படுகின்றது.
- மொசப்பத்தேமியா என்பதன் பொருள் இரு நதிகளுக்கிடையே அமைந்துள்ள நாடு என்பதாகும்.
- மொசப்பத்தேமிய நாகரிகத்தில் முக்கிய நகரங்களைச் சூழ்ந்து வாழ்ந்தவர்கள்
  - ➢ விவசாயம்
  - ➢ மந்தை வளர்ப்பு போன்றவற்றில் ஈடுபட்டனர்.
- மழைகுறைவாகக் காணப்பட்ட பகுதிகளில்
  - ➢ ஆற்று நீரைக் கால்வாய் மூலம் பெற்று பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தினர்.
  - ➢ பயிர்ச்செய்கைக்கு ஏற்ற வகையில் நிலத்தைத் தயார் செய்தனர்.
  - ➢ நிலத்தைப் பண்படுத்த மிருகங்களைப் பயன்படுத்தினர்.
  - ➢ உலோகத்தினால் செய்யப்பட்ட
    - கலப்பை
    - கல்லால் செய்யப்பட்ட மண்வெட்டி போன்றவற்றைப் பயன்படுத்தினர்.
- மொசப்பத்தேமியாவில்
  - ➢ தானியங்கள்
  - ➢ பழங்கள்
  - ➢ காய்கறிகள் பயிரிடப்பட்டன.
  - ➢ கோதுமை,
  - ➢ பார்லி முக்கிய தானியங்கள்.

### மொசப்பத்தேமிய நாகரிக கால வழிபாட்டு முறை

- மொசப்பத்தேமிய மக்கள் இயற்கையைத் தெய்வமாகக் கருதி வழிபட்டனர்.
  - ➢ மழை
  - ➢ காற்று
  - ➢ வெள்ளம் போன்றவை தெய்வமாக வழிபடப்பட்டன.
- இயற்கைக்குரிய தெய்வங்களைத் திருப்திப் படுத்தவே தாம் வாழ்வதாகக் கருதினர்.
  - ➢ கடவுள் குழுவின் தலைவர் **“அனு”** என அழைக்கப்பட்டார்.
  - ➢ பூமிக்கு அதிபதியான கடவுள் - **என்கிகி**
  - ➢ காற்றுக்கும், விவசாயத்திற்கும் அதிபதியான கடவுள் - **என்லிலி**

- மொசப்பத்தேமிய அனைத்து நகரங்களிலும் அந்நகரத்திற்குரிய கடவுள் இருந்ததாகக் கூறப்படுகின்றது.
- கடவுளை வழிபட அமைக்கப்பட்ட ஆலயங்கள் **“சிகுறாத்”** எனப்பட்டன.
- ஆலயக் குருமாருக்கு சமூகத்தில் பிரதான இடம் அளிக்கப்பட்டது.

## மொசப்பத்தேமிய நாகரிக கால வர்த்தகம்

- ஆறுகளில் பயணம் செய்வதற்கு சிறு கப்பல்களைப் பயன்படுத்தினர்
- கப்பல்களைப் பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
  - உணவு
  - பானவகைகள்
  - ஆடை
  - ஆபரணங்கள்

  வர்த்தகத்தில் பயன்படுத்தப்பட்டன.
- மொசப்பத்தேமியாவின் வட பகுதியில் வாழ்ந்தவர்கள் - அசீரியர்கள்
- ஆசீரியர்கள்
  - சிறந்த வர்த்தகர்கள்
  - தரை மார்க்கமாக வர்த்தகத்தில் ஈடுபட்டனர்
  - வர்த்தகப் பொருட்களைக் கழுதை மீது ஏற்றிக்கொண்டு சென்றனர்
  - அவை **“தவலம்”** என அழைக்கப்பட்டன.

## மொசப்பத்தேமிய நாகரிக கால சமூகம்.

- சமூகம் நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது.
  1. குருமார்
  2. உயர்குடி மக்கள்
  3. கீழ்மட்ட மக்கள்
  4. அடிமைகள்
- சமூகத்தில் அதிகாரம் படைத்தவர்கள் - குருமார்
- குருமார்
  - சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்
  - வைத்தியர்களாகச் செயற்பட்டனர்
  - தலைமுடியை மழித்திருந்தனர்
  - செம்மறி ஆட்டின் தோலால் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தனர்.
- உயர்குடிமக்கள்
  - ஆண்கள், பெண்கள் தங்கத்தாலான பல்வேறு ஆபரணங்களை அணிந்திருந்தனர்
  - ஆண்கள் தலைமுடியை நீளமாக வளர்த்தனர்
  - தாடியும் நீளமாக இருந்தது.
  - பெண்கள் ஒரு தோளை மூடியதாக ஆடை அணிந்தனர்
  - தலைமுடியை நீளமாக வளர்த்தனர்.
- கீழ்மட்ட மக்கள்
  - செல்வந்தர்களாக வாழவில்லை
  - தமது வீடுகளில் சாதாரண வாழ்க்கை வாழ்ந்தனர்
  - அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்தனர்
  - வேலைக்கு சம்பளம் வழங்கப்பட்டது.
  - இவர்களது உடையும், ஆபரணமும் பெறுமதி வாய்ந்தனவாக இருக்கவில்லை.

## மொசப்பத்தேமிய நாகரிக கால எழுத்துக்கலை

- மொசப்பத்தேமியாவில் பயன்படுத்தப்பட்ட எழுத்து ஆப்பு எனப்பட்டது.
- இதனை எழுதுவதற்கு களிமண்ணால் செய்யப்பட்ட தட்டுக்கள் பயன்படுத்தப்பட்டன.
- ஈரமான களிமண் தட்டுக்களின் மீது கூராக்கப்பட்ட குச்சி ஒன்றினைக் கொண்டு அந்த எழுத்தை எழுதினர்.
- ஆரம்பத்தில் உருவம் வரைதல் போன்று ஆரம்பமான எழுத்து முறை பின் எழுத்துத் தொகுதியாக வளர்ச்சியடைந்தது.
- களிமண் தட்டுக்களில் எழுதப்பட்டவற்றுள்
  - வர்த்தகம் தொடர்பான விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.

- உலகின் மிகப் பழமைவாய்ந்த இலக்கிய நூல் கில்மேஷ் என்பவரால் ஆப்பு வடிவிலான எழுத்துக்களால் எழுதப்பட்ட வீரக்கதை
- களிமண்தட்டில் எழுதுவது கடினமானதாக இருந்த போதும் மொசப்பத்தேமியர் திறமையாக எழுதியுள்ளனர்.
- களிமண் தட்டின் மீது எழுதப்பட்ட சில கடிதங்களை உறையிலிட்டு குறிப்பிட்ட நபர்களுக்கு அனுப்பியுள்ளனர்.
- மொசப்பத்தேமியாவை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் - ஹமுராபி
- ஹமுராபி என்ற ஆட்சியாளரால் தயாரிக்கப்பட்ட சட்டக்கோவை உலகின் மிகப்பழைய சட்டநூலாகும்.

**சிந்துவெளி நாகரிகம்.**

- சிந்துவெளி (சிந்துநதி) நாகரிகம் இந்தியாவின் வடமேற்குப் பகுதியினூடாகப் பாய்ந்து செல்லும் சிந்து நதியை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது.
- தற்போது இப்பிரதேசங்கள்
    - ஆப்கானிஸ்தான்
    - பாகிஸ்தான்
    - இந்தியாவின் வடமேற்குப் பிரதேசத்திற்குரியதாக உள்ளன.
- இந்நாகரிகம் கி.மு 2600 – 1990 க்கு இடைப்பட்ட காலத்தில் நிலவியதாகக் கருதப்படுகின்றது.
- மொஹஞ்சதாரோ
- ஹரப்பா இங்குள்ள பிரதான நகரங்கள் ஆகும்.
- சிந்துவெளி நாகரிக பிரதேசத்திற்கு உட்பட்ட நகரங்களின் சனத்தொகை 50,00,000 ஆக இருந்துள்ளது.
- சிந்து வெளி நாகரிக மக்கள்
    - செம்பு
    - வெண்கலம்
    - ஈயம்
    - வெள்ளீயம் (Tin)

      போன்ற உலோகங்களை உபயோகித்தனர்.
- சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட வீடுகளில் வாழ்ந்துள்ளனர்.
- அந்த வீடுகளில் மிகவும் உயர்நிலையிலான நீர்க்குழாய்த் தொகுதிகள் பொருத்தப்பட்டு இருந்தன.
- நகரங்கள் நன்கு திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்தன.
- இம்மக்கள் எழுத்துக்களாகப் பயன்படுத்தக் கூடிய குறியீட்டுத் தொகுதியை உருவாக்கினர்.
- சிந்துவெளி நாகரிகத்திற்கு உட்பட்ட முக்கிய நகரங்கள்
    - மொகஞ்சதாரோ
    - ஹரப்பா
    - டொலவீர
    - கலிபன்கள்
- சிந்து நதி நாகரிக காலத்தில் நகரங்களில் வாழ்ந்த மக்கள் சிறந்த ஒழுங்கு முறையில் அமைக்கப்பட்ட
    - கிணறு
    - வடிகால்கள்
    - அழுக்குகளை வெளியேற்றும் குழாய்த் தொகுதி என்பவற்றை உபயோகித்தனர்.
    - சிந்து நதி (வெளி) நாகரிகத்தைச் சேர்ந்த நகரங்களில் நன்கு அமைக்கப்பட்ட வீதிகள் காணப்பட்டன.
    - இது போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்திற்குச் சான்றாகும்.
    - சிந்துவெளி நாகரிகத்தில் கண்டறியப்பட்ட பொருட்கள்
        - சிந்துவெளி நகரத்தொகுதி
        - மதகு

- கிணறு
- விளையாட்டு மண்வண்டி
- காண்டாமிருகம் ( ரைனோசிரஸ்

**எகிப்திய நாகரிகம்.**

- கி.மு 3150 ஆம் ஆண்டுகளில் நிலவியது.
- ஆபிரிக்கா கண்டத்திற்குரிய நாகரிகம்
- நைல் நதியின் சமவெளிப் பிரதேசத்தை மையமாகக் கொண்டது.
- இப் பிரதேசம் தற்பொழுது எகிப்து நாட்டினுள் அடங்குவதனால் இது எகிப்திய நாகரிகம் என அழைக்கப்படுகின்றது.
- நீண்ட காலமாக பாராவோ எனப்படும் பரம்பரையைச் சேர்ந்த அரசர்களால் இந்தப் பகுதி ஆட்சி செய்யப்பட்டது.
- எகிப்திய மக்களின் பிரதான ஜீவனோபாயம் - விவசாயம்.
- விவசாயத்திற்கான நீர்ப்பாசனத் தொகுதி ஒன்றைச் சிறப்பாக அமைப்பதில் அவர்கள் சிறந்து விளங்கினர்.
- எகிப்திய நாகரிகம் உலகிற்கு வழங்கிய கொடை – பிரமிட்டுக்கள்
- பாராவோ மன்னர்களினதும் அவர்களின் மனைவிமார்களின் சடலங்கள் பிரமிட்டுக்களில் அடக்கம் செய்யப்பட்டன.
- எகிப்தின் தலைநகர் - கெய்ரோ
- கெய்ரோ நகரத்திலிருந்து சிறிது தூரத்தில் அமைந்துள்ள கீசா என்ற இடத்தில் பிரமிட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- எகிப்தின் மிகப்பழைய பிரமிட்டு கி.மு 2630 – 2611 காலத்தில் அமைக்கப்பட்டவைகளாகும்.
- கீசா பிரமிட் உலகின் 7 அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.
- எழுத்துத் தொகுதி ஒன்று பெறப்பட்டுள்ளது.
- பல்வேறுபட்ட மிருகங்கள், பொருட்களின் உருவங்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த எழுத்துக்கள் எகிப்திய சித்திர எழுத்துக்கள் என அழைக்கப்படுகின்றது.
- நெபநெபவுட்டேன் நெபட்டிட்டி என்ற அரசி பாராவோ (பார்வோன்) மன்னனான அகனெட்டான் (அக்ஹெனதன்) என்பவரின் மனைவி.
- கி.மு 1370 – 1330 இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தாள்.
- அகனெட்டான் (அக்ஹெனதன்) இறந்த பின் எகிப்தை சில காலம் ஆட்சி செய்துள்ளாள்.
- பேரழகி ஆகக் கருதப்பட்டாள்.
- இறந்த உடலை நீண்ட காலம் பேணி வைத்திருப்பது – மம்மி
- மம்மி முறையை எகிப்திய நாகரிகத்தவர்களே உலகிற்கு வழங்கியுள்ளனர்.
- கி.மு 1332 – 1323 இடைப்பட்ட காலத்தில் துட்டன் காமன் (டுடன் காமன்) என்ற மன்னனின் மம்மியின் முகத்தின் மீது தங்கத்திலான முகமூடி வைக்கப்பட்டிருந்தது.

# அலகு 6.2 ஆதிமனிதன்



# அலகு 6.2 ஆதிமனிதன்



# இலங்கையின் பிரதான குளங்கள்



# அலகு 6.3 உலகின் புராதன நாகரிகங்கள்



## அலகு 6.3 உலகின் புராதன நாகரிகங்கள்



# அலகு 6.3 உலகின் புராதன நாகரிகங்கள்

